# மரணமும் - மறுமையும்

''ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு...... பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு......''(பிரசங்கி 3:1, 2) மேற்கூறிய வசனத்திற்கொப்ப இப்பூவுலகின்கண் பிறந்த ஒவ்வொருவரும் ஒரு நாளில் மரிப்பது நிச்சயமே. யாவருக்கும் மரணத்தைப் பற்றிய பயமும் நடுக்கமும் ஏற்படுவதும் இயல்பே. படித்தவர்கள் — படியாதவர்கள், ஏழைகள் — பணக்காரர்கள், பலவான்கள்—பலவீனர்கள், வாலிபர்—வயோதிபர், சிறுவர் யாவரையும் மரணம் ஒருநாளில் சந்திப்பது மாருத ஒரு பிரமாணம். உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் யாதோ ஒரு காரணத்தை முன்னிட்டு மரிப்பது திண்ணம். சிலர் வியாதியினுலும், சிலர் விபத்துக்களினுலும், சிலர் தற்கொலே செய்து கொள்ளுவதினுலும், சிலர் கொலே செய்யப்படுவதினுலும் மரிக்கிருர்கள். யாதொரு காரணமும் இல்லாமல் ஒருவரும் மரிக்கிறதில்லே. மனிதர் மரிப்பதற்கு ஒரு காரணம் இருக்குமாப் போல் மரணம் உலகத்தில் வந்ததற்கும் ஒரு காரணம் உண்டு. இக்காரணத்தை சத்திய வேதம் மிகவும் தெளிவாகக் கூறுகிறது. ''பாவத்தின் சம்பளம் மரணம்'' (ரோமர் 6: 23) ''பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'' (எசே. 18: 4) ஆகையால் பாவத்தினிமித்தமே மனிதர்கள் மரிக்கிருர்கள். தேவனுடைய பார்வைக்கு முன்பாக ஒருவனுவது நீதிமான் இல்லே ''எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாஞேம்'' (ரோமர் 3:23) இப்படியாக, ஒரே மனுஷனுலே பாவமும், பாவத்தினுலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. (ரோமர் 5:12).

உலகத்தில் விஞ்ஞானிகளும், சாஸ்திர நிபுணர்களும், பல வித நூதனமானவைகளேக் கண்டுபிடித்தபோதிலும் மனிதன் மரணத்திலிருந்து தப்பித்து சதாகாலம் ஜீவனேடிருக்கும் வழியையோ இதுவரைக்கும் கண்டுபிடிக்கவில்லே அப்படி கண்டுபிடிக்கவும் முடியாது. 'ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரம் இல்லே; மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரம் இல்லே. (பிரசங்கி 8:8).

மேற்கூறியவண்ணம் உலகத்திலே பிறந்த ஒவ்வொருவரும், சுபாவத்தின்படியும் தங்கள் சொந்தக் கிரியைகளின்படியும் இந்த மரணமாகிய ஆக்கினேத் தீர்ப்புக்கு ஏதுவானவர்களாய் இருக்கிருர்கள். ''ஒரே மீறுதலினுலே எல்லா மனிதர்களுக்கும் ஆக்கினேக்கு ஏதுவானத் தீர்ப்பு உண்டானது'' (ரோமர் 5: 18) ''ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.'' (எபிரேயர் 9: 20).

எனினும் அப்படிப்பட்ட பயங்கரமான ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து நம்மை இரட்சிக்க தேவன் ஒரு வழியையும் ஆயத்தம் பண்ணியுள்ளார். அதாவது ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரை (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை) தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோவான் 3: 16) ''நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொருக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'' (ஏசாயா 53: 5) ஆகையால் இந்தக் கைப்பிரதியை வாசிக்கும் பிரியமுள்ள நண்பனே தேவன் உம்முடைய பாவங்களினிமித்தம் நீர் அடைய வேண்டிய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து உம்மை விடுவிக்க அவர் தாமே பாடுபட்டு ரத்தம் சிந்தி மரித்தும், மூன்றும் நாள் உயிரோடெழுந்துமிருக்கிறார். 'ஜீவியகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படி அப்படியானார்' (எபிரேயர் 2:15). இதை நீர் முழுமனதுடன் விசுவாசிப்பீரானால் இரண்டாம் மரணமாகிய நித்திய ஆக்கினைத் தீர்ப்புக்கு நீங்கலாகி பாவ மன்னிப்பையும் நித்திய ஜீவனையும், சமாதானத்தையும், இரட்சிப்பின் சந்தோஷத்தையும் பெற்று அனுபவிப்பீர் என்பது திண்ணம். இதைக்குறித்து கவலையற்றிருப்பீரானால் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைய வேண்டி நேரிடும் (வெளி. 21: 8) அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத்தேயு 24: 51)

ஆகையால் இதை வாசிக்கும் நீர் மெய் மனஸ்தாபத்தோடு உம்முடைய பாவத்தை அறிக்கைச்செய்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வீரானால், அவர் உம்முடைய பாவங்களை யெல்லாம் மன்னித்து, உமக்கு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நித்திய ஜீவனையும் கொடுப்பது மட்டுமல்லாமல் சதாகாலமும் பரலோகத்தில் அவரோடேகூட ஜீவிக்கும்படியான சிலாக்கியத்தையும் கொடுப்பார் ''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.''

அப்போஸ்தலர் **16 : 31**

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India